# ‘ஒரு மானமில்லை, அதில் ஈனமில்லை’

(எடப்பாடி பழனிச்சாமி வீட்டின் உள்ளே அமர்ந்திருக்கிறார்! வெளியே இரண்டு மூன்று கார்கள் சர்... சர்... என வந்து நிற்கின்றன.)

**எடப்பாடி** : (உதவியாளரிடம்) என்னப்பா... வெளியே சத்தம், யாருன்னு பாரு...

**உதவியாளர்**: யாருன்னு தெரியல்ல... இரண்டு மூணு காரு வந்து நிற்குது...

**எடப்பாடி** : சரியா பாருய்யா.. அமலாக்கத் துறையா?... வருமான வரித்துறையான்னு? (உதவியாளர் ஜன்னல் வழியாகப் பார்க்கிறார்)

**எடப்பாடி** : யாருய்யா... சீக்கிரம் சொல்லித் தொலையய்யா!

**உதவியாளர்** : இப்போதான் இறங்கப் போகிறார்கள்... கார் கதவு திறக்கிறது.

**எடப்பாடி** : என்ன எழவுய்யா... சீக்கிரம் சொல்லு! கார்களுக்குப் பின்னாடி ஏதாவது மத்திய, மாநில போலீஸ் வந்து இறங்குறாங்களா?

**உதவியாளர்** : அப்படி எல்லாம் எதுவும் தெரியலேய்யா...

**எடப்பாடி** : யாருய்யா... வர்றாங்க...

**உதவியாளர்** : யாருமில்லேய்யா... பயப்பட ஒண்ணுமில்லை... நம்ப கட்சிக்காரங்கத்தான் சில பேர் வர்றாங்க...

**எடப்பாடி** : அப்பாடா... வேறு யாருமில்லையே... இப்பதான்பா எனக்கு மூச்சே வருது... நம்ப கட்சிக்காரன்களுக்கு காலம் நேரமே கிடையாதா?... எதுக்கு இப்ப வர்றாங்களாம்.

**உதவியாளர்** : தெரியலியே... அய்யா! வந்தா அவங்கக்கிட்டே என்ன சொல்றது!

**எடப்பாடி** : உட்காரச் சொல்லு... இல்லேன்னா அவங்க முடுக்கிக்கிட்டு மிரட்டுவாங்க... ‘இந்த மடம் இல்லேன்னா சந்தை மடம்ன்னு’ சொல்வாங்களே, அதைப்போல ஓ.பி.எஸ். பக்கம் கிளம்பிடுவாங்க...

(உதவியாளர், வந்த தோழர்களை வரவேற்று உட்கார வைக்கிறார்! வந்தவர்களில் ஒருவர் உதவியாளரைப் பார்க்கிறார்... உதவியாளர் தனது முகத்தில் படிந்திருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டிருக்கிறார்!)

**வந்தவர்** : என்ன ஏன் இப்படி வியர்த்து நிற்கிறீர்கள்...

**உதவியாளர்** : (சமாளித்தவாறு) ஒண்ணுமில்லே. ஒண்ணுமில்லே... எதை எதையோ நினைக்கும் போது நம்மை அறியாம வியர்த்து விடுகிறது.

**வந்தவர்கள்:** பொதுச் செயலாளர் புரட்சித் தமிழர் இருக்கிறாரா?


**உதவியாளர்** : புரட்சித் தமிழரா?.... நீங்க சத்யராஜை தேடி வந்தீர்களா?

**வந்தவர்** : யோவ்... நீர் எடப்பாடியின் உதவியாளர்தானே...

**உதவியாளர்** : ஆம்... ஆம்... அதில் என்ன சந்தேகம்?

**வந்தவர்** : நம்ம எடப்பாடியாருக்கு புரட்சித்தமிழர் என்ற பட்டத்தை

## ( கற்பனை உரையாடல் )



சமீபத்தில் மதுரை மாநாட்டில் கொடுத்தது தெரியாதா?

**உதவியாளர்** : ஓ... மறந்துவிட்டேன். மன்னிச்சுக்குங்க... இருக்கிறார்... இதோ போய் சொல்கிறேன்... (உதவியாளர் மனதிற்குள்... புரட்சித் தமிழராம்... அய்யா பயந்துபோய் மிரண்டு கிடக்கிறார்; புரட்சித் தமிழர் என்பதற்கு பதில் மிரட்சித் தலைவர் என்று பட்டம் தந்திருந்தால் மிகமிகப் பொருத்தமாக இருந்திருக்கும்! என முணுமுணுத்தவாறு எடப்பாடியிடம் செல்கிறார்!)

**எடப்பாடி** : என்னய்யா... முணுமுணுத்தபடி வர்றே...

**உதவியாளர்** : ஒண்ணுமில்லே அய்யா... அவங்க ஏதோ அவசரமா உங்களைப் பார்க்க வந்திருக்காங்களாம்!



**எடப்பாடி** : சரி... சரி... (என்றவாறு வந்தவர்களைப் பார்க்கப் புறப்படுகிறார்) (பார்க்க வந்தவர்கள் இருக்கும் இடத்துக்கு எடப்பாடி செல்ல, “புரட்சித் தமிழர்... வாழ்க!” “அடிமைச் சங்கிலியை அறுத்தெறிந்த அடலேறு வாழ்க!” “பா.ஜ.க.வின் கொட்டம் அடக்கப் புயலாய் புறப்பட்ட புரட்சித் தமிழர் பழனிச்சாமி வாழ்க!” “அண்ணாமலைக் கூட்டத்தின் கொட்டத்தை அடக்கிய ஆட்டம் பாம் அண்ணன் ஈ.பி.எஸ்... வாழ்க...” என்றெல்லாம் முழக்கமிட்டவாறு எடப்பாடி பழனிச்சாமியை தொண்டர்கள் வாழ்த்துகின்றனர்.)

**எடப்பாடி** : நன்றி... நன்றி... எல்லாரும் உட்காருங்க...

**தொண்டர்கள்** : நல்ல முடிவு எடுத்தீங்க தலைவரே! பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லேன்னு சொன்னதிலிருந்து நம்ப தொண்டர்களுக்கு புது முறுக்கு வந்திடுச்சு... பட்டாசு வெடிச்சு, இனிப்பு வழங்கி எல்லா இடங்களிலும் கொண்டாட்டம்தான்! இந்த முடிவிலிருந்து யார் எதைச் சொன்னாலும் மாறிடாதீங்க...

**எடப்பாடி** : சரி... சரி... இன்றிலிருந்து பா.ஜ.க.வின் சர்வாதிகார ஆட்சியை, மதவெறியை அம்பலப்படுத்துவோம். பா.ஜ.க. இல்லாத அணியை அமைத்துப் போரிடுவோம்! அண்ணாமலை போன்ற அரைக்கால் வேக்காட்டு அரசியல்வாதிகளின் கொட்டம் அடக்குவோம்!

**தொண்டர்கள்** : புரட்சித் தமிழன் வாழ்க! (எனக் கோஷமிட்டுக் கொண்டிருக்கின்றனர், அப்போது எடப்பாடியின் உதவியாளர் வருகிறார்.)

**உதவியாளர்** : அய்யா... ஒரு நிமிடம்.

**எடப்பாடி** : என்னய்யா...?

**உதவியாளர்** : கொஞ்சம் உள்ளே வர்றீங்களா... தனியாப் பேசணும்!

**எடப்பாடி** : (உள்ளே சென்று உதவியாளரிடம்) என்னத்த தனியாப் பேசணும்!

**உதவியாளர்** : டெல்லியிலிருந்து போன் வந்துச்சுய்யா... உள்துறை அமைச்சர் உங்களிடம் பேசணுமாம்!

**எடப்பாடி:** என்னய்யா? திடீர்ன்னு இடியை இறக்குறே.. நாம் பேசக் கேட்ட போதெல்லாம் நேரம் ஒதுக்காதவர் இப்ப என்ன பேசப்போறாராம்!

**உதவியாளர்** : தெரியலே அய்யா... நம்பர் கொடுத்திருக்காங்க... அழைக்கட்டுமா?

**எடப்பாடி:** அழைச்சுத் தொலை...

(உதவியாளர் தனது அலைபேசியிலிருந்து அழைக்கிறார்... அலைபேசியை எடப்பாடியிடம் கொடுக்க...)

**எடப்பாடி:** நமஸ்தே ஜி... என்கிறார். (அங்கிருந்து என்ன பேசப்படுகிறது என்பது தெரியவில்லை.. எடப்பாடியின் முகம் வியர்க்கிறது. வியர்வைத் துளிகள் முகமெல்லாம் படர்கின்றன.)

**(எடப்பாடி, ‘ஓ.கே...ஜி....’ ‘அப்படியே ஆகட்டும் ஜி’ ‘இதெல்லாம் ஒரு நாடகம் ஜி’ எங்க கட்சிக்காரங்களை திருப்திப் படுத்தவே சும்மா எடுத்த முடிவு ஜி... அய்யய்யோ... கோபப்படாதிங்க ஜி... முனுசாமி பேட்டி கொடுத்ததைச் சொல்றீங்களா? அந்த ஆளு அப்படித்தான், கொஞ்சம் முந்திரிக்கொட்டைத் தனமா செஞ்சிருவாரு, நான் அவரைக் கண்டிக்கிறேன். இல்லை ஜி, இல்லை ஜி... நான் நமது கூட்டைப் பற்றி இதுவரை எங்கேயும் வாயையே திறக்கலை. நம்ப கூட்டணி ஒரு நாளும் முறியாது ஜி... ‘நீங்க காலால் இட்ட கட்டளையை தலையால் நிறைவேற்றக் காத்திருக்கிறோம். ஜி’ - ஓ... நீங்க எங்க மாவட்டச் செயலாளர் கூட்டத்தில் எடுத்த முடிவு பற்றி கேட்கிறீங்களா?... அதெல்லாம் உங்க பாஷையிலே சொல்லணும்னா ஜூம்லா... அதாவது சும்மானாச்சுக்கும்... எதையும் சீரியசாக எடுத்துக்காதீங்க... அப்படியா?.. உடனே அறிவிச்சுடுறேன்...**

– என்றெல்லாம் எடப்பாடி பேசுவது கேட்கிறது! வெளிரிய முகத்துடன் எடப்பாடி காணப்படுகிறார்! முகத்தை துண்டால் துடைத்துக் கொண்டவாறு காத்திருக்கும் தொண்டர்களிடம் வருகிறார்!)

**தொண்டர்கள்** : தலைவரே; வருகிறோம் தலைமை கிரீன் சிக்னல் கொடுத்துவிட்டது. இனி அந்த மதவெறி பி.ஜே.பி. கூட்டத்தைப் பிய்த்து – அக்கு வேறு ஆணி வேறாக ஆக்கி விடுகிறோம் (எனப் புறப்பட...)

**எடப்பாடி:** அவசரப்படாதீர்கள்...

**தொண்டர்கள்** : என்ன சொல்கிறீர்கள்?

**எடப்பாடி:** பாரதிய ஜனதா குறித்தோ, அக்கட்சித் தலைவர்கள் குறித்தோ யாரும் எதுவும் இனி பேசக் கூடாது!



சிலந்தி

**தொண்டர்கள்:** அவர்கள் குட்டுவார்கள்; நாம் குனிய வேண்டுமா? பின்னர் எதுக்காக மாவட்டச் செயலாளர்கள், கட்சியின் முக்கியத் தலைவர்கள் கூடி, இனி பாரதிய ஜனதாவுடன் ஒட்டுமில்லை; உறவுமில்லை என்று கூறினீர்கள்!

**எடப்பாடி:** அது அரசியல் சாணக்யம்!

**தொண்டர்:** அது சாணக்யம் இல்லை; உங்களை நம்பி நின்ற இலட்சக்கணக்கான தொண்டர்களின் சுயமரியாதையை, தன்மான உணர்வை தகர்த்தெறிந்த தற்குறித்தனம்; தான்தோன்றித்தனம் – [எனக்கூறி வெளியேறுகின்றனர்].

(எடப்பாடி வீட்டின் தொலைக்காட்சியில் பாடல் ஒலித்துக் கொண்டிருக்கிறது.)

**‘சிலர் ஆசைக்கும் தேவைக்கும்**
**வாழ்வுக்கும் வசதிக்கும்**
**ஊரார் கால் பிடிப்பார்**
**ஒரு மானமில்லை, அதில் ஈனமில்லை**
**அவர் எப்போதும் வால்பிடிப்பார்’**

(எடப்பாடி வீட்டுக்குள் போய், “நேரம் காலம் தெரியாமல், டி.வி.யில் ஏதேதோ பாட்டு பாடுது. **முதல்ல, டி.வி.யை ஆஃப் பண்ணுய்யா” என்று கூறியவாறு, ஏ.சி.யை, ஃபேனை வேகமாக போட்டு விட்டு அமர்கிறார்.)**